SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.ம.ஆகாஷ், இளநிலை உதவியாளர், ஆணையர் அலுவலகம், சென்னை – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (4ப) எண்.06

நாள்: 26.07.2022
சுபகிருது, ஆடி–10
திருவள்ளுவராண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.46494/ 2019/பி.3, நாள்.31.05.2022.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறையில், கிருஷ்ணகிரி மாவட்டம், அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயிலில், நிலை 3 செயல் அலுவலராகப் பணிபுரிந்த திரு.இரா.மகாலிங்கம் அவர்கள் 07.10.2015 அன்று பணியில் இருக்கும்போது இயற்கை எய்தியுள்ளார் எனவும், அன்னாரின் மகனான திரு.ம.ஆகாஷ் என்பவரால் 15.09.2017 நாளிட்ட விண்ணப்பத்தின் மூலம் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டப்பட்டது எனவும், மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, 12.10.2021 நாளிட்ட ஆணையரது செ.மு.ந.க.எண்.46494 / 2019 / பி3–ல் சென்னை, ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, 25.10.2021 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார் எனவும், திரு.ம.ஆகாஷ் அவர்கள் கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்கும்போது

Scanned with CamScanner

இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயதுத்தகுதி பெற்றிருந்தார் எனவும், அன்னார் கருணை அடிப்படையில் பணி வேண்டி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும், எனவே, திரு.ம.ஆகாஷ் என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 25.10.2021 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயற்குறிப்பினை உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை, ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திரு.ம.ஆகாஷ் என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 25.10.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வு பெற தனியர் விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.12278/க்யூ1/2022, நாள்.08.07.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.2770607/ஜி2/2022, நாள்.20.07.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.ம.ஆகாஷ், இளநிலை உதவியாளர்,
ஆணையர் அலுவலகம், சென்னை-34.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

நகல்:-
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/7/22
பிரிவு அலுவலர்

Scanned with CamScanner